# விருதுநகர் நகராட்சி

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2048 ம் சோபகிருது வருடம் ஆனி 32 ம் நாள் 2024 ம் ஆண்டு ஜூலை மாதம் 16.07.2024 ம் தேதி செவ்வாய் கிழமை மாலை 4.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் இராஜா மாளிகை பெருந்தலைவர் காமராஜர் கூடத்தில் நடைபெறும் சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

**பொருள் : 1**

விருதுநகர் நகராட்சி அலுவலகத்தில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு (15.07.2024) நகராட்சி அலுவலகத்தில் ஒளிஅமைப்பு வாடகைக்கு கொள்முதல் செய்ய சீரியல் செட் 150 எண்ணம் மற்றும் Foucs Light 4 எண்ணம் அமைத்து 14.07.2024 மற்றும் 15.07.2024 ஆகிய இரண்டு தினங்கள் எரியச் செய்து கொடுக்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.30,000/ க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண் : இ2/ 0908-2/2024

**நகர்மன்ற தீர்மான எண் : 776 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 2**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் 2022-2023 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் போது கீழ்க்காணும் அறிவிப்பு செய்யப்பட்டது.

**"சாலையோர வியாபாரிகளுக்கானத் திட்டம் (Street Vendors Welfare)**

தகுதியான சாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திட நடப்பாண்டில் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அடையாள அட்டை வழங்கப்பட்டு, அவர்கள் எவ்வித சிரமும் இன்றி வியாபாரம் செய்வதற்கு ஏற்ற சூழல் உருவாக்கப்படும்."

இதனைத் தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA1, நாள்.16.06.2022ல், தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தை பாதுகாத்தல் மற்றும் வியாபாரத்தினை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015-ன்படி கணக்கெடுப்பு செய்து அவர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனைச்சான்று தயார் செய்து வழங்குதல் மற்றும் விற்பனைத் திட்டம் தயார் செய்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டதைத் தொடர்ந்து, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவோர வியாபாரிகளின் கணக்கெடுப்பு நடைபெற்றதில், மொத்தம் 354 நபர்கள் உள்ளனர் எனக் கண்டறியப்பட்டு, மேற்படி நபர்களுக்கு அடையாள அட்டை மற்றும் விற்பனைச் சான்றும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை-28 அவர்களின் கடிதம் ந.க.எண்..20789/2021/UPA, நாள்.07.06.2024ல்

தற்போது தெருவோர வியாபாரிகளின் கணக்கெடுப்புப் பணி முடிவுற்றதால், தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் விதிகள் 2015, அத்தியாயம் IV–ன் படி, நகர விற்பனைக்குழு அமைக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தெருவோர வியாபாரிகள் (வாழ்வாதாரத்தை பாதுகாத்தல் மற்றும் விற்பனையினை ஒழுங்குபடுத்துதல்) திட்டம் மற்றும் விதிகள் 2015, அத்தியாயம் IV–ன்படி, நகர விற்பனைக்குழு அமைக்கப்பட வேண்டும். நகர விற்பனைக்குழுவில் தலைவருடன் சேர்த்து மொத்தம் 15 உறுப்பினர்கள் அடங்குவர்.

| | | |
|---|---|---|
| நகராட்சி ஆணையர் | -- | 1 (தலைவர்) |
| மருத்துவ அலுவலர் | -- | 1 |
| காவல் அலுவலர்கள் (போக்குவரத்து காவல் அலுவலர் உள்பட) | -- | 2 |
| நகராட்சியின் ஏதேனும் ஒரு அலுவலர் | -- | 1 |
| தெருவோர வியாபாரிகளின் பிரதிநிதிகள் | -- | 6 |
| வணிகர் சங்கப் பிரதிநிதிகள் | -- | 1 |
| அரசு சாரா மற்றும் சமூதாய அமைப்பின் பிரதிநிதிகள் | -- | 2 |
| குடியிருப்போர் நலச்சங்க பிரதிநிதிகள் | -- | 1 |

மேற்கண்ட 15 உறுப்பினர்களில் 9 உறுப்பினர்களை (தெருவோர வியாபாரிகள் தவிர்த்து) சம்மந்தப்பட்ட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் நியமனம் செய்யப்பட வேண்டும் எனவும், மீதம் உள்ள 6 உறுப்பினர்களை மட்டும் கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ள தெருவோர வியாபாரிகள் 354 நபர்களுக்கிடையே தேர்தல் நடத்தி தேர்தல் மூலம் 6 உறுப்பினர்களை தேர்வு செய்ய வேண்டும் எனவும், அவர்களை கீழ்க்காணும் விவரப்படி தேர்வு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (1) | ஆதிதிராவிடர் | -- | 1 |
| (2) | இதரபிற்படுத்தப்பட்டோர் | -- | 1 |
| (3) | மகளிர் | -- | 1 |
| (4) | மாற்றுத்திறனாளி | -- | 1 |
| (5) | சிறுபான்மையினர் | -- | 1 |
| (6) | பொது | -- | 1 |

மேலும், மேற்கண்ட தேர்தல் நடைபெறும் நாள், நேரம் மற்றும் இடம் குறித்து நகர்மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் என மேற்கண்ட விதிகளில் விதி எண்.13(3) ல் குறிப்பிடப்பட்டுள்ளது. நகர்மன்றம் தீர்மானம் நிறைவேற்றிய பின்பு தேர்தல் நடத்தி அதன் மூலம் 6 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, நகர விற்பனைக் குழுவில் இடம் பெறவுள்ள 6 தெருவோர வியாபாரிகளை உறுப்பினர்களாக தேர்வு செய்வதற்கான தேர்தலை கீழ்க்காணும் படி நடத்த நகர்மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

**தேர்தல் நடைபெறும் இடம் : – நகராட்சிஅலுவலகம், விருதுநகர்**

| **தேர்தல்விவரப்பட்டியல்** | | **நாள்** | **நேரம்** |
|---|---|---|---|
| தேர்தல் அறிவிக்கை வெளியிடுதல் | -- | 22.07.2024 | |
| வேட்பு மனுக்கள் பெறுதல் | -- | 02.08.2024 | காலை 10 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை |
| வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வதற்கான கடைசிநாள் | -- | 12.08.2024 | காலை 10 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை |
| வேட்பு மனுக்கள் பரிசீலனை | -- | 13.08.2024 | காலை 11 மணி முதல் |
| வேட்பு மனுக்கள் வாபஸ் பெறுதல் | -- | 14.08.2024 | பிற்பகல் 3 மணி வரை |
| வாக்குப்பதிவு நடைபெறும் நாள் | -- | 21.08.2024 | காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை |
| வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாள் | -- | 21.08.2024 | மாலை 6 மணிக்கு நடைபெறும் |

**அலுவலககுறிப்பு**

1. மேற்குறிப்பிட்ட அட்டவணையின் படி தேர்தல் நடத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தேர்தல் தொடர்பாக ஆகும் செலவினங்களை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.
3. இரண்டு தமிழ் நாளிதழ்களில் பிரசுரம் செய்ய ஆகும் செலவினங்களை நகராட்சியின் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.5808/2022/எப்1)

**நகர்மன்ற தீர்மான எண் : 777 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 3**

விருதுநகர் நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களில் கீழ்க்கண்ட 5 குத்தகை இனங்கள் 31.03.2024 அன்றுடன் குத்தகை உரிமகாலம் முடிவடைந்து மேலும் 3 ஆண்டு காலத்திற்கு குத்தகை உரிமம் வழங்குவதற்காக பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

| **வ. எண்** | **குத்தகை இனம்** |
|---|---|
| 1 | மதுரை ரோடு பாரா உந்து வாகனம் (லாரி நிலையம்) நிலையத்திற்குள்ளும் மற்றும் நகராட்சி எல்லைக்குள் வரக்கூடிய பாரா உந்து வண்டிகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம். |
| 2 | எம்.எஸ்.பி. ராஜா பழைய பேருந்து நிலைய வளாக மாடியில் உள்ள ஐந்து தங்கும் அறைகளுக்கு வாடகை வசூல் செய்யும் உரிமம். |

| | |
|---|---|
| 3 | எம்.எஸ்.பி.ராஜா தினசரி சந்தை மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள 33 கடைகள் மற்றும் இரண்டு குடோன்கள் கட்டண வசூல்செய்யும் உரிமம். |
| 4 | புளுகணூரணி சாலையில் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட ஆட்டுச்சந்தை இடத்தில் உள்ள இருசக்கர வாகன காப்பகம் வசூல் செய்யும் உரிமம். |
| 5 | எம்.எஸ்.பி. ராஜா பழைய பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி மூலம் விளம்பரம் செய்து வசூல் செய்யும் உரிமம் |

மேற்படி பொது ஏல நடவடிக்கையின் போது சட்டம் ஒழுங்கு சீர்கெடாமல் இருக்கும் பொருட்டு இவ்வலுவலக கடிதத்தின் மூலம் காவல் துறை பாதுகாப்பு வழங்கக் கோரப்பட்டது. விருதுநகர் நகராட்சிக்கு சொந்தமான மேற்படி குத்தகை இனங்களை குத்தகை உரிமம் பெறுவதனால் பல ஆண்டுகளாக இரு தரப்பினருக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டு தொடர்ந்து கொலை மற்றும் குற்றச் சம்பவங்கள் நடந்து வருவதாகவும் எனவே மேற்படி குத்தகை இனங்களை 5 ஆண்டு காலத்திற்கு பொது ஏல நடவடிக்கையினை நிறுத்தி வைத்து நகராட்சி நிர்வாகமே நடத்திக் கொள்ள காவல் கண்காணிப்பாளர், விருதுநகர் அவர்களது கடிதத்தில் அறிவுறுத்தப் பட்டது. மேலும் 2024-ம் ஆண்டிற்கான நாடாளுமன்றத் தேர்தல் குறித்த முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகளில் காவல் துறையினர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருவதால் மேற்படி குத்தகை இனங்களுக்கான பொது ஏல நடவடிக்கையின் போது, போதுமான காவல் துறை பாதுகாப்பு வழங்க இயலாது எனவும், பொது ஏல நடவடிக்கையின் போது சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சனை ஏற்படா வண்ணம் உரிய காவல் துறை பாதுகாப்பு வழங்க காவல்துறையினருடன் நன்கு ஆலோசித்து பொது ஏல தேதியினை நிர்ணயம் செய்ய காவல் துணை கண்காணிப்பாளர், விருதுநகர் அவர்களது கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. அதன்படி 31.03.2024 முடிய மேற்படி குத்தகை இனங்களுக்கு குத்தகை உரிமம் பெற்றவர்களுக்கு 01.04.2024 முதல் 30.06.2024 முடிய மேலும் 3 மாத காலத்திற்கு குத்தகை உரிமத்தினை அனுபவித்துக் கொள்ள இந்நகர்மன்றத்தின் அனுமதி பெற்று உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி குத்தகை இனங்கள் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதனால் ஏற்படும் சட்ட ஒழுங்கு பிரச்சனை குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட சட்டம் மற்றும் ஒழுங்கு ஆய்வுக் கூட்ட நடவடிக்கைகளில் காவல் துறையினர் மற்றும் ஆணையாளரின் முன்னிலையில் கலந்தாலோசிக்கப்பட்டது. மேற்படி ஆய்வுக் கூட்டத்தின் முடிவில் மேற்படி ஏலமானது TAMIL NADU TRANSPARENCY IN TENDERS ACT 1998 AND TAMILNADU TRANSPARENCY IN TENDERS RULES 2000 -ன்படி இணையவழி முறையில் ஏலமிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. மேற்படி குத்தகை இனங்களுக்கு இணையவழி மூலமாக பொது ஏல நடவடிக்கை எடுக்க இயலாத காரணத்தினால் பொது ஏல நடவடிக்கையினை தவிர்த்து ஒப்பந்தப்புள்ளி மட்டும் இணையவழி மூலமாக கோருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண் : ந.க.எண். : 43/2024/அ1

**நகர்மன்ற தீர்மான எண் : 778 ஆட்சேபனைK.ஜெயக்குமார் நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் செய்யப்பட்டது. மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 4

விருதுநகர் நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களில் கீழ்க்கண்ட 5 குத்தகை இனங்கள் 31.03.2024 முதல் முடிவடைந்த நிலையில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான பிரச்சனைகளை கருத்தில் கொண்டும், காவல் துறையினரின் வேண்டுதல்களின் படியும், நகராட்சியின் நிர்வாக காரணங்களை முன்னிட்டு ஏற்கனவே கீழ்க்கண்ட குத்தகை இனங்களை நடத்தி வந்த குத்தகைதாரர்களுக்கு

மேலும் 3 மாத காலத்திற்கு நடத்திக் கொள்ள நகர்மன்றத்தீர்மானம் எண்.720 நாள் : 08.03.2024-ன் ஒப்புதலின்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | குத்தகை இனம் |
|---|---|
| 1 | மதுரை ரோடு பாரா உந்து வாகனம் (லாரி நிலையம்) நிலையத்திற்குள்ளும் மற்றும் நகராட்சி எல்லைக்குள் வரக்கூடிய பாரா உந்து வண்டிகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம். |
| 2 | எம்.எஸ்.பி. ராஜா பழைய பேருந்து நிலைய வளாக மாடியில் உள்ள ஐந்து தங்கும் அறைகளுக்கு வாடகை வசூல் செய்யும் உரிமம். |
| 3 | எம்.எஸ்.பி.ராஜா தினசரி சந்தை மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள 33 கடைகள் மற்றும் இரண்டு குடோன்கள் கட்டண வசூல்செய்யும் உரிமம். |
| 4 | புளுகணூரணி சாலையில் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட ஆட்டுச்சந்தை இடத்தில் உள்ள இருசக்கர வாகன காப்பகம் வசூல் செய்யும் உரிமம். |
| 5 | எம்.எஸ்.பி. ராஜா பழைய பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சி பெட்டி மூலம் விளம்பரம் செய்து வசூல் செய்யும் உரிமம் |

மேற்படி குத்தகை இனங்களை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரும் நடவடிக்கையின் போது ஏற்படும் சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சனைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் விருதுநகர் அவர்களால் 30.04.2024 அன்று நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் மேற்படி குத்தகை இனங்களை இணையவழி மூலமாக ஏல நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி குத்தகை இனங்களை இணையவழி மூலமாக ஒப்பந்தப்புள்ளி மட்டும் கோருவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் ஒப்புதல் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாடாளுமன்றத் தேர்தல் நடவடிக்கை விதிகள் 06.06.2024 முடிய இருந்து வந்த காரணத்தினால் இது தொடர்பான நடவடிக்கைகள் எடுக்க இயலாமல் இருந்து வந்ததாலும், மேற்படி குத்தகை இனங்களுக்கான உரிமைக்காலம் 30.06.2024 அன்றுடன் முடிவடைவதாலும் நகராட்சியின் நிர்வாக நலன் கருதி மேற்படி குத்தகை இனங்களை தற்போது நடத்தி வரும் குத்தகைதாரர்களுக்கு மேலும் 3 மாத காலத்திற்கு (30.09.2024 முடிய) அல்லது குத்தகை நடவடிக்கை முடித்து குத்தகை உரிமம் வழங்கும் காலம் எது முன்னதோ அது வரை குத்தகை உரிமையினை நீடித்து உத்தரவு வழங்க நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1.**மன்றம் அனுமதிக்கலாம்.**

**2.நகராட்சி நிர்வாக நலன் மற்றும் நிதியிழப்பினை கருத்தில் கொண்டு நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று குத்தகை உரிமம் வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.**

கோப்பு எண் : ந.க.எண். : 43/2024/அ1

**நகர்மன்ற தீர்மான எண் : 779 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 5

விருதுநகர் நகராட்சி வருவாய் பிரிவு வரி இல்லா இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோருவது சம்மந்தமாக விளம்பரம் செய்ய 2023-2024ஆம் ஆண்டு பொது நிதியின் கீழ்

விளம்பரம் செய்வதற்கான செலவினத் தொகை ரூ.5.00/- இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு:மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்புஎண்:அ1/0043/2024

**நகர்மன்ற தீர்மான எண் : 780 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 6**

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 36 வார்டுகளிலும் சிமெண்ட் சாலைகள் ஆங்காங்கே சேதமடைந்த நிலையில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வண்ணம் உள்ளது. இதனால் சேதமடைந்த சாலைகளை சீரமைக்க ரூ 9.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது இப்பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண் : இ1/3293 /2024

**நகர்மன்ற தீர்மான எண் : 781 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 7**

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 36 வார்டுகளிலும் பேவர் block சாலைகள் ஆங்காங்கே சேதமடைந்த நிலையில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வண்ணம் உள்ளது. இதனால் சேதமடைந்த சாலைகளை சீரமைக்க ரூ 9.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது இப்பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண் : இ1/3294/2024

**நகர்மன்ற தீர்மான எண் : 782 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 8**

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 36 வார்டுகளிலும் தார் சாலைகள் ஆங்காங்கே சேதமடைந்த நிலையில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வண்ணம் உள்ளது. இதனால் சேதமடைந்த சாலைகளை சீரமைக்க ரூ 9.90 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது இப்பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண் : இ1/3295/2024

**நகர்மன்ற தீர்மான எண் : 783 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 9**

விருதுநகர் நகராட்சியால் பராமரிக்கப்படும் ஆணைக்குட்டம் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து மதுரை ரோடு கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கும், ஒண்டிப்புலி கல்குவாரியில் இருந்து VNPR பூங்கா கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கும் குடிநீரானது உந்தம் செய்யப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது இதில் குடிநீர் உந்து குழாயில் ஆங்காங்கே உடைப்பு ஏற்பட்டு கசிவு ஏற்படுகின்றது இதனை சரிசெய்ய ரூ9.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது இப்பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண் : இ2/3296/2024

**நகர்மன்ற தீர்மான எண் : 784 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 10**

விருதுநகர் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள் மற்றும் மின்விசைப்பம்புகள் ஆகியவற்றினை பராமரிக்க தேவைப்படும் மின் உதிரிப்பாகங்கள் (2024-2025) ம் ஆண்டிற்கு வாங்குவதற்கு ரூ 5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி குடிநீர்நிதியின் மூலம் பணி மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண் : இ2/3297/2024

**நகர்மன்ற தீர்மான எண் : 785 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 11**

விருதுநகர் நகராட்சியில் வார்டு 11 ல் அல்லி தெருவில் குடிநீர் விநியோகப் பணிகளுக்காக குழாய் பதிக்கும் போது அப்பகுதியில் உள்ள சிறுபாலம் சேதமடைந்து பொதுமக்கள் மற்றும் பள்ளிக்குழந்தைகள் பாதையினை பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே சிறுபாலத்தினை சீரமைக்கும் பணியினை மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ 4.25 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. அப்பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி பொதுநிதியின் கீழ் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண் : இ2/3298/2024

**நகர்மன்ற தீர்மான எண் : 786 திருத்தம் வார்டு எண் 13. மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 12**

விருதுநகர் நகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ்உள்ள மாத்தநாயக்கன்பட்டி சாலையில் உள்ள கழிவுநீருந்து நிலையத்தின் முன்பகுதியில் உள்ள சேதமடைந்த சிறுபாலத்தினை சீரமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.5.10 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி குடிநீர் நிதியின் மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண் : இ1/3299/2024

**நகர்மன்ற தீர்மான எண் : 787 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 13**

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட ஆணைக்குட்டம் தலைமை நீரேற்று நிலையம் ஒண்டிப்புலி கல்குவாரி நீரேற்று நிலையம் தரைமட்டத் தொட்டி, மதுரை ரோடு தரைமட்டத்தொட்டி மற்றும் VNPR பூங்கா தரைமட்ட நீர்த்தேக்க தொட்டி ஆகிய இடங்களில் பயன்படுத்தப்படும் மின் மோட்டார்கள் மற்றும் பம்புகளில் அவ்வபோது எற்படும் பழுதுகளை சரிசெய்ய (2024-2025) நிதி ஆண்டின் கீழ் பணிகளை மேற்கொள்ள ரூ.8.00இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண் : இ1/0712-1/2023

**நகர்மன்ற தீர்மான எண் : 788 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 14**

விருதுநகர் நகராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் பாதாள சாக்கடை திட்டத்தின் கழிவு நீரேற்று நிலையங்கள் மற்றும் கழிவு நீருந்து நிலையங்கள் ஆகியவற்றில் உள்ள கழிவுநீர் சேகரிக்கும் அமைப்புகளில் துார்வார (Derilting) உத்தேச மதிப்பீடு ரூ 2.50 இலட்சத்திற்கு

தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி குடிநீர் நிதியின் மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண் : இ2/3300/2024

**நகர்மன்ற தீர்மான எண் : 789 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 15

விருதுநகர் நகராட்சியால் பராமரிக்கப்படும் நுண்ணுரம் செயலாக்க மையத்திற்கு (Mcc center) தேவைப்படும் மின் உதிரி பாகங்கள் வாங்குவதற்கும் மற்றும் நகராட்சி வளாகத்தில் அவ்வப்போது ஏற்படும் மராமத்து பணிகளை சீர் செய்ய ஆகும் உத்தேச செலவீனம் ரூ1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண் : இ1/3292 /2024

**நகர்மன்ற தீர்மான எண் : 790 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 16

தமிழ்நாடு நகரப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023–ன் படி நகராட்சி பகுதிகளில் நடைபெறும் வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள் , தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம் வழங்கிட உரிமம் வழங்குவதற்கான நிறுவனங்களின் வகைப்பாட்டினை அத்தியாம் (9) பகுதி – I அட்டவணை I, II, மற்றும் III–ல் வகைப்படுத்தி குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச கட்டணங்களின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தகுந்தார் போல் நிர்ணயம் செய்து உரிமம் வசூலித்து உரிமம் வழங்கிட வேண்டியுள்ளது . தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023–ல் தொழில் உரிமங்கள் வழங்குவது குறித்த விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தணைகள் மற்றும் விதிமுறைகள் மண்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது . இதன்படி இந்நகராட்சி பகுதியில் இயங்கி வரும் தொழில்களுக்கு பின்வரும் விவரப்படி உரிமக் கட்டணம் 01.04.2024–ஆம் தேதி முதல் நிர்ணயம் செய்து தொழில் உரிமம் வழங்கிட மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**வர்த்தகம் மற்றும் வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம் மற்றும் மற்ற நோக்கங்களுக்காக உரிமம்**

வர்த்தக உரிமத்திற்கான விண்ணப்பம் –(1) அட்டவணைகள் I, II, மற்றும் III–ல் குறிப்பிட்டுள்ள, பொது அல்லது தனியார் என எந்தவொரு வர்த்தகம் அல்லது வியாபாரத்தினையும் ஆணையாளரால் வழங்கப்பட்ட ஒரு உரிமமின்றி நகராட்சி எல்லைக்குள் எவரும் மேற்கொள்ளக்கூடாது.

அத்தகைய உரிம வழங்குவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் , விருதுநகர் நகர் மன்றத்தால் வரையறுக்கப்பட்ட கட்டணத்துடன் படிவம் 1 – இல் ஆணையாளருக்கு சமர்பிக்கப்பட வேண்டும் மற்றும் பின்வரும் ஆவணங்கள் அத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

தனி நபரைப் பொறுத்தவரையில் ஆதார் அட்டை மற்றும் நபர்களின் குழு அல்லது நிறுவனத்தினைப் பொறுத்தவரையில் நிலையான கணக்கு எண் அட்டை அல்லது கூட்டுரும சான்றிதழ் போன்ற அடையாள சான்று.

உரிமம் விண்ணபிக்கப்படுகிற வர்த்தகம் அல்லது வியாபாரத்தின் முகவரியை தெளிவாக காண்பிக்கும் குத்தகை பத்திரம் அல்லது வருமானம் ஒப்பந்தம் அல்லது சமீபத்திய சொத்து வரி ரசீது அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விவர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

செல்லுபடியாகக் கூடிய முகவரிச்சான்று எதுவும் விண்ணப்பதாரரிடம் இல்லையெனில் , அவர் படிவம் 17–இல் பிரமாணம் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்க வேண்டும்.

அட்டவணை 1–ன் கீழான விண்ணப்பங்களுக்கு , நிறுவனத்தின் வகைப்பாடு குறித்து தீர்மானிப்பதற்கு உதயம் பதிவுச்சான்றிதழ் அல்லது சமீபத்திய பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விபர அறிக்கை அல்லது வருமான வரி விபர அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

உதயம் பதிவுச் சான்றிதழ் அல்லது எந்தவொரு வரி விபர அறிக்கையும் விண்ணப்பதாரரிடம் இல்லையெனில், அவர் உரிமம் கோரப்படுகிற நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்றளிக்கும் படிவம் 18–இல் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தினை சமர்பிக்க வேண்டும்.

அதன் பயன்பாட்டுக்கு உள் விதி ( 1)–ன் கீழ் உரிமம் தேவைப்படுகிற ஒவ்வொரு இடத்தின் உரிமையாளர் அல்லது குடியிருப்பவரும் , அத்தகைய நோக்கங்களுக்காக அந்த இடம் பயன்படுத்தப்படுவதற்கு முன்பு 45 நாட்களுக்கு குறையாமலும் , 90 நாட்களுக்கு மிகாமலும் அத்தகைய உரிமத்திற்காக ஆணையாளரிடம் விண்ணப்பிக்கவேண்டும்

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண் 289 விதி ( 5)ன் கீழ் வழங்கப்பட்ட உரிமம் , பிரிவு ( 6)–ல் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டதாகும்.

உரிமம் புதுப்பிப்பதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் உரிமம் காலாவதியாவதற்கு மூன்று மாதத்திற்கு முன்பு மன்றத்தால் நிர்ணயிக்கப்படுகிற உரிமக் கட்டணத்துடன் படிவம் 1–ல் ஆனையாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

உரிமம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் போது உரிமம் பெறுபவரால் நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய வரி அல்லது கட்டணம் எதுவும் நிலுவையில் இருக்கக்கூடாது.

அட்டவணைகள் I, II, III மற்றும் IV–ல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமக் கட்டண விகிதங்கள் 01.04.2024 தேதி முதல் அமுலுக்கு வரும்.

**குறிப்பு:–** (எ) எந்தவொரு நிதி ஆண்டும் ஏப்ரல் முதல் தேதி துவங்கி மார்ச் 31–ம் தேதி முடிவடையும்.

**அட்டவணை I**

[See rules 289(1), (2) and (5)]

1. பொருந்தக்கூடிய தன்மை

1948 –ம் ஆண்டு தொழிற்சாலை சட்டம் ( 1948 –ம் ஆண்டு மத்தியச் சட்டம் LXM) 1951–ம் ஆண்டு தொழிற்சாலைகள் (மேம்பாடு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம் ( 1951–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 65), 1959 ஆம் ஆண்டு படைக்கலச் சட்டம் ( 1959–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 54), 1884–ம் ஆண்டு வெடிபொருட்கள் சட்டம் ( 1884–ம் ஆண்டு மத்தியச் சட்டம் IV) மற்றும் 1934–ம் ஆண்டு பெட்ரோலிய சட்டம் ( 1934–ம் ஆண்டு மத்தியச் சட்டம் XXX) ஆகியவற்றின் கீழ் உரிமம் வழங்கப்படாத பொருள் உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள எந்தவொரு தொழில் அல்லது தொழிற்சாலை அல்லது நிறுவனத்திற்கும் இது பொருத்தும்.

2. உரிமக்கட்டணம் :

அ) குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான உரிமக் கட்டணம், 2006 ஆம் ஆண்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டத்தின் படியான (2006–ம் ஆண்டு மத்தியச் சட்டம் 27), அத்தகைய தொழில் நிறுவனங்களின் வகைப்பாட்டின் அடிப்படையில் விதிக்கப்படும்.

ஆ) அந்த தொழிற்சாலையின் வகைப்பாடு பொருட்கள் மற்றும் சேவைகள் வரி எண் அல்லது சமீபத்திய வருமான வரி விபர அறிக்கையினை பயன்படுத்தி தீர்மானிக்கப்படும் விண்ணப்பதாரர் ஒரு செல்லுபடி ஆகக்கூடிய உதயம் பதிவு சான்றிதழ் மற்றும் வரி விவர அறிக்கைகளை கொண்டிருக்கவில்லை எனில் உரிமம் கோரப்படுகிற தொழில் நிறுவனத்தின் வகைப்பாட்டினை சான்று அளித்து படிவம் 17 இல் உள்ள பிரமாண பத்திரம் ஒன்றை அவர் சமர்பிக்க வேண்டும்.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023–ல் குறு , சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்கு உரிமம் வழங்கிட உரிமை கட்டணம் நிர்ணயம் செய்திட குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச தொழில் உரிமை கட்டணங்களுக்காக பட்டியல்

**(A) குறு தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |

| | | |
|---|---|---|
| நகராட்சி மன்றம் | 1500/- | 3500/- |

**(B) சிறு தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 3500/- | 5000/- |

**(C) நடுத்தர தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 7500/- | 10000/- |

**(D) நடுத்தர தொழில் நிறுவனங்கள் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 10000/- | 35000/- |

**வர்த்தகங்கள் / வியாபாரங்கள் பட்டியல் : (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| **வ. எண்** | **வர்த்தகங்கள் / வியாபாரங்கள் பட்டியல்** | **அ)குறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில்** | **ஆ)சிறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில்** | **இ)நடுத்தர தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில்** | **ஈ)மற்றவை (அல்லது) பெரிய தொழிற்சாலை எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில்** |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | தையல் பொருட்கள் உற்பத்தி செய்தல் | **1500/-** | **3500/-** | **7500/-** | **10000/-** |
| 2 | தையல் இயந்திரங்கள் உற்பத்தி செய்தல் | **1500/-** | **3500/-** | **7500/-** | **10000/-** |
| 3 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் | **1500/-** | **3500/-** | **7500/-** | **10000/-** |
| 4 | அனைத்து வகையான மின் மோட்டார்கள் மற்றும் பம்புகளை உற்பத்தி செய்தல் | **1500/-** | **3500/-** | **7500/-** | **10000/-** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | மின்சார மோட்டார்கள் மற்றும் பம்புகளை சேமித்து வைத்து விற்பனை செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 6 | கல் உடைத்தல் மற்றும் நொறுக்குதல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 7 | காகித தயாரிப்புகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 8 | அனைத்து வகையான உலோகங்களையும் உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 9 | அனைத்து வகையான கொள்கலன்களையும், பாத்திரங்களையும் உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 10 | அனைத்து வகையான மோட்டார்கள் (மின்மோட்டார்கள் அல்லாத) மற்றும் பம்புகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 11 | அனைத்து வகையான தொழிற்சாலை இயந்திரங்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 12 | மோட்டார் வாகன உதிரி பாகங்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 13 | அனைத்து வகையான கட்டுமான பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 14 | அனைத்து வகையான பொறியியல் பணிகள் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 15 | செங்கல் சூளைகள் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 16 | அனைத்து வகையான ஆட்டோமொபைல் உதிரி பாகங்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 17 | அனைத்து வகையான ஒப்பனைப் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 18 | அனைத்து வகையான நாட்டு மருந்துகள் ஒப்பனைப் பொருட்கள் மற்றும் மூலிகை பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 19 | அனைத்து வகையான கட்டுருவாக்க பணிகள் (Fabric Works) | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 20 | துருப்பிடிக்காத எஃகு வேலை மற்றும் மெருகுக்கூட்டல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21 | அனைத்து வகையான ரசாயன பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 22 | அனைத்து வகையான மருத்துவ உபகரணங்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 23 | அனைத்து வகையான சலவை மற்றும் சுத்தப்படுத்தும் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 24 | அனைத்து வகையான இயந்திர எண்ணெய்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 25 | கொதிக்கலன் உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 26 | காற்றுப்பதனிகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 27 | அனைத்து வகையான கண்ணாடி பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 28 | அனைத்து வகையான எழுது பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 29 | அனைத்து வகையான ரப்பர் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 30 | அனைத்து வகையான வீட்டு உபயோகப் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 31 | பூச்சிக்கொல்லிகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 32 | பேட்டரிகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 33 | மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 34 | அணிகலன்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 35 | இசைக்கருவிகளை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 36 | துப்புரவு பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 37 | சுண்ணாம்பு கால்வாய் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 38 | அனைத்து வகையான தென்னை நார் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 39 | அனைத்து வகையான | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆடைகள் / துணிகள் / ஜவுளிகளை உற்பத்தி செய்தல் | | | | |
| 40 | அனைத்து வகையான தொல்பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 41 | அனைத்து வகையான மர / பிளைவுட் / சன்மைக்கா பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 42 | அனைத்து வகையான வன்பொருட்களை (Hardwares) உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 43 | அனைத்து வகையான விளையாட்டு பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 44 | அனைத்து வகையான வேளாண் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 45 | அனைத்து வகையான உணவெண்ணெய்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 46 | பால் பொருட்களை உற்பத்தி செய்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 47 | டீ (Tea) தூள் தயாரித்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |
| 48 | காபி (Coffee) தூள் தயாரித்தல் | 1500/- | 3500/- | 7500/- | 10000/- |

**அட்டவணை II**

[See rules 289(1), (2) and (5)]

1. பொருந்தும் தன்மை

(1). இந்த அட்டவணை எந்த ஒரு வர்த்தகம் அல்லது வியாபாரம் மேற்கொள்ளப்படுகிற அல்லது வாடிக்கையாளர்களுக்கு சேவைகள் அளிக்கப்படுகிற எந்த ஒரு கடை அல்லது வணிக நிறுவனத்திற்கும் அதே வளாகத்தில் உள்ளதோ அல்லது பிறவாறாக உள்ளதோ அத்தகைய வியாபாரம் தொடர்பாக பயன்படுத்தப்படுகிற சரக்கு அறைகள் கிடங்குகள் மற்றும் பண்டகசாலைக்கும் பொருந்தும்.

(2). பின்வரும் வகைப்பாடுகளுக்கு இந்த அட்டவணை பொருந்தாது:-

1. இந்த விதிகளின் மற்ற அட்டவணைகளில் குறிப்பிட்டுள்ள வகைப்பாடுகள்
2. 2013 ஆம் ஆண்டு நிறுவன சட்டத்தின் கீழ் ( 2013-ஆம் ஆண்டு மத்திய சட்டம் 18) பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், வங்கிகள், நிதி நிறுவனங்கள்.
3. சம்பந்தப்பட்ட சட்டங்களின் கீழ் உரிமம் பெற்ற உலாவல் மையங்கள் (Browsing centers) மற்றும் உடற்பயிற்சி கூடங்கள்/
4. 1948 -ம் ஆண்டு படைக்கல சட்டம் ( 1959 -ம் ஆண்டு மத்தியச் சட்டம் 54) 1884-ம் ஆண்டு வெடிபொருட்கள் சட்டம் ( 1884 -ம் ஆண்டு மத்தியச் சட்டம் IV) மற்றும் 1934-ம் ஆண்டு பெட்ரோலிய சட்டம் (1934-ம் ஆண்டு மத்தியச் சட்டம் XXX) மற்றும்

1952 –ம் ஆண்டு ஒளிப்பதிவு சட்டத்தின் கீழ் (1957 –ம் ஆண்டு மத்தியச் சட்டம் 37) உரிமம் பெற்ற வர்த்தகங்கள் மற்றும் வியாபாரங்கள் மற்றும்

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 அட்டவணை II–ல் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு உரிமம் வழங்கிட உரிமக்கட்டணம் நிர்ணயம் செய்திட அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள குறைந்தபட்ச மற்றும் அதிகபட்ச தொழில் உரிம கட்டணங்களுக்கான பட்டியல்

**1) உரிமக்கட்டணம் (ஒரு வருடத்திற்கான கட்டணம்)**

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 700/– | 3000/– |

**2) வர்த்தகங்கள் மற்றும் வியாபாரங்கள் பட்டியல்:**

| **வ. எண்** | **வர்த்தகங்கள் / வியாபாரங்கள் பட்டியல்** | **அ)குறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில் ரூபாயில்** | **ஆ)சிறு தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில்** | **இ)நடுத்தர தொழில் நிறுவனங்கள் எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில்** | **ஈ)மற்றவை (அல்லது) பெரிய தொழிற்சாலை எனில் 01.04.2024 முதல் நிர்ணயம் செய்யப்படும் கட்டணம் ரூபாயில்** |
|---|---|---|---|---|---|
| **1** | அரசால் அனுமதிக்கப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் | **700/–** | **1000/–** | **2000/–** | **3000/–** |
| **2** | தையல் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | **700/–** | **1000/–** | **2000/–** | **3000/–** |
| **3** | தையல் இயந்திரங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | **700/–** | **1000/–** | **2000/–** | **3000/–** |
| **4** | அனைத்து வகையான கையால் செய்யப்பட்ட பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | **700/–** | **1000/–** | **2000/–** | **3000/–** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 6 | அனைத்து வகையான மின் மற்றும் மின்னணு சர்வீஸ் மையங்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 7 | அனைத்து வகையான காகித பொருட்களையும் சேமித்து வைத்தல். மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 8 | கழிவுத்தாள் கடை / பழைய வேண்டாத பொருட்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 9 | நூற்பு வேலைகள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 10 | அனைத்து வகையான இயந்திர எண்ணெய்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 11 | காற்று பதனிகளை பழுது பார்த்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 12 | காற்றழுத்திகள் (Air Compressors) | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 13 | அனைத்து வகையான உலோகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 14 | எடை இயந்திர நிலையங்கள் (Weighing Macines) | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 15 | பேட்டரி சார்ஜ் செய்கிற கடைகள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 16 | மோட்டார் வாகன ஷோரூம்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 17 | தலைக்கவச கடைகள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 18 | இருசக்கர வாகனங்கள் மற்றும் மூன்று சக்கர வாகனங்களுக்கான ஆட்டோமொபைல் பழுதுபார்ப்பு மையங்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 19 | இலகுரக மோட்டார் வாகனங்கள் மற்றும் கலராக மோட்டார் வாகனங்களுக்கான ஆட்டோமொபைல் பழுது பார்ப்பு மையங்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 20 | அனைத்து வகையான மோட்டார்கள் மற்றும் பம்புகளையும் சேமித்து வைத்தல் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 21 | மோட்டார் வாகன உதிரி பாகங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 22 | அனைத்து வகையான ஒப்பனை பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 23 | அனைத்து வகையான தொழிற்சாலை இயந்திரங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 24 | அனைத்து வகையான ரசாயன பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 25 | பூச்சிக்கொல்லி மருந்துகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 26 | அனைத்து வகையான மருத்துவ உபகரணங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 27 | அனைத்து வகையான சலவை மற்றும் சுத்தம் செய்யும் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 28 | அனைத்து வகையான கண்ணாடி பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 29 | அனைத்து வகையான வன்பொருட்களையும் ஹார்டுவேர்ஸ் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 30 | அனைத்து வகையான ஆட்டோமொபைல் உதிரி பாகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 31 | அனைத்து வகையான இடது பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 32 | அனைத்து வகையான கட்டுமான பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 33 | அனைத்து வகையான ரப்பர் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 34 | அனைத்து வகையான வீட்டு உபயோக உபகரணங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 35 | அணிகலன்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 36 | இசைக்கருவிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 37 | துப்புரவு பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் (தளவாட சாமான்கள்) | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 38 | அனைத்து வகையான தென்னை நார் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 39 | அனைத்து வகையான ஆடைகள் / துணிகள் / ஜவுளிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 40 | அனைத்து வகையான மறுப்பட்டை இடப்பட்ட டயர்கள் / டயர்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 41 | அனைத்து வகையான கொள்கலன்கள் மற்றும் பாத்திரங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 42 | அனைத்து வகையான அரைகலன்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 43 | அனைத்து வகையான மர பிளைவுட் சன் மைக்கா பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 44 | மர வடிவமைப்புகள் விற்பனை | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 45 | சாமியான மற்றும் பாத்திரங்களை வாடகைக்கு விடுதல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 46 | அனைத்து வகையான தோள் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 47 | கண் கண்ணாடிகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 48 | அனைத்து வகையான விளையாட்டு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 49 | அனைத்து வகையான கைக்கடிகாரம் மற்றும் கைக்கடிகார உதிரி பாகங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 50 | அழைப்பிதழ்கள் வாழ்த்து அட்டை விற்பனை / அர்ச்சகம், கணிப்பொறி பதிப்பகம் உட்பட | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 51 | மருந்து கடைகள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 52 | மருத்துவ உபகரணங்கள் / சாதனங்கள் மற்றும் உட்பொருத்திகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 53 | மூங்கில் தென்னை ஓலை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 54 | எரியக்கூடிய பொருட்கள் பிலிம் செல்லுலாய்ட் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 55 | புல் மற்றும் வைக்கோல்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 56 | முட்டுக் கொடுக்கும் பொருட்களை (Centering Materials) வாடகைக்கு விடுதல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 57 | அனைத்து வகையான வேளாண் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 58 | அனைத்து வகையான உரங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 59 | திரைப்பட செயலாக்கம் மற்றும் வண்ணமயமாக்கல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 60 | வாகன நிறுத்த நிலையங்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 61 | திரைப்பட ஆய்வகங்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 62 | பார்சல் புக் செய்யும் இடங்கள் / தூதர்கள் (Courier) சேவைகள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 63 | கேபிள் டிவி சேவைகள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 64 | கேடயங்கள் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 65 | உள்நாட்டு பட்டுப்புழு வளர்ப்பு பொருட்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 66 | பட்டாணி வறுவல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 67 | ஃபேன்சி ஸ்டோர் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 68 | பஞ்சு மெத்தை / தலையணை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 69 | மிதிவண்டி பழுதுபார்க்கும் கடைகள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 70 | பல் பொருள் அங்காடி | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 71 | ஜெராக்ஸ் கடை, கணிப்பொறி பதிப்பக மையங்கள், இ-சேவை மையம் மற்றும் இணையம் நிலையம் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 72 | ஸ்டிக்கர் கடைகள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 73 | தாவர நாற்றங்கால் கடைகள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 74 | புகைப்பட சட்டகம் செய்தல் (Photo Framing Works) | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 75 | தார்பாலின்களை சேமித்து வைத்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 76 | பொற்கொல்லர்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 77 | அனைத்து வகையான துப்புரவு பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் (கிருமி நாசினிகள்) | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 78 | டைல்ஸ் / மார்பிள்ஸ் / மார்பில்கள் / கிரானைட்களை சேமித்து வைத்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மற்றும் விற்பனை செய்தல் | | | | |
| 79 | தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் சாதனங்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 80 | முடிவெட்டும் நிலையங்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 81 | அழகு நிலையங்கள் / தடுப்பு சுவர்கள் அல்லது அறைகள் இல்லாத ஸ்பாஸ் (Spa's) | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 82 | தையல் கடைகள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 83 | சலவையகங்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 84 | வினைல் போர்டு கடைகள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 85 | காலனி கடைகள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 86 | கைப்பேசி கடைகள் (விற்பனை மற்றும் பழுதுபார்த்தல்) | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 87 | மிதிவண்டி மற்றும் உதிரி பாகங்கள் விற்பனை | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 88 | புகைப்படம் எடுக்கும் நிலையங்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 89 | திரைப்படங்கள் எடுக்கும் நிலையங்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 90 | பதிவு செய்யும் நிலையங்கள் (Recording Theater) | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 91 | அச்சகங்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 92 | அனைத்து வகையான அச்சிடுதல்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 93 | துணிகளை விற்பனை செய்தல் (சிறிய கடைகள்) | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 94 | நகைகளை விற்பனை செய்தல் (சிறிய | 700/- | 1000/- | 2000/- | 3000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கடைகள்) | | | | |
| 95 | நெல் அவித்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 96 | மரம் அறுக்கும் ஆலைகள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 97 | FCS ஆலைகள் (Farm and commercial Storage Manufatcuring) | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 98 | அரிசி ஆலைகள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 99 | பாக்கெட்டில் போடப்பட்ட கறியினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 100 | கோழி இறைச்சினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 101 | ஆட்டு இறைச்சியை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 102 | கோழி இறைச்சி / ஆட்டு இறைச்சி சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 103 | மாட்டு இறைச்சினை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 104 | கடல் உணவுகளை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 105 | அனைத்து வகையான உணவுப் பொருட்களையும் தயார் செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 106 | அனைத்து வகையான பால் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை | 700/- | 1000/- | 2000/- | 3000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செய்தல் | | | | |
| 107 | அனைத்து வகையான உணவு எண்ணெய்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 108 | அனைத்து வகையான உணவுப் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 109 | அனைத்து வகையான பால் பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 110 | அனைத்து வகையான நாட்டு மருந்துகள் ஒப்பனை மற்றும் மூலிகை பொருட்கள் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 111 | மருத்துவ ஆய்வகங்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 112 | அனைத்து வகையான செல்லப்பிராணிகள் கடைகள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 113 | அனைத்து வகையான கால்நடைகள் பறவைகள் தீவனங்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 114 | காபி கொட்டை வறுத்தல் மற்றும் அரைத்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 115 | பால் மற்றும் பால் பொருட்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 116 | காய்கறிகள் பழங்கள் மற்றும் பூக்களை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 117 | அனைத்து வகையான மளிகை பொருட்களையும் சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 118 | பேக்கரிகள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 119 | பழச்சாறு கடைகள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 120 | AMF (Assured Minimum Facility) உடன் டீக்கடைகள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 121 | நீர்வாழ்வன காட்சிசாலை (Aquarium) | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 122 | ஊற வைத்த தானியங்களை அரைத்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 123 | சுற்றுலா மற்றும் பயணங்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 124 | மண் அள்ளும் இயந்திரங்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 125 | கட்டிட பொருட்களை வாடகைக்கு எடுத்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 126 | புளோர் மில் அரிசி / கோதுமை, சீயக்காய்,மிளகாய் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 127 | புகையிலை சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 128 | பட்டாசு சேமித்து வைத்தல் மற்றும் விற்பனை செய்தல் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 129 | பொரி கடலை விற்பனை | 700/- | 1000/- | 2000/- | 3000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 130 | பெட்ரோல் பங்க் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |
| 131 | இப்பட்டியலில் சொல்லப்படாத இதர இனங்கள் | 700/- | 1000/- | 2000/- | 3000/- |

**அட்டவணை III**

[See rules 289(1), (2) and (5)]

**1. பொருந்தும் தன்மை :-**

(1). தெளிவாக வரையறுக்கப்பட்ட சமையலறை மற்றும் இருக்கை கூடங்களுடன் கூடிய உணவுக்கூடங்கள் சிற்றுண்டி சாலை அல்லது உணவகங்கள்

(2).1939-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார சட்டத்தில் வரையறுக்கப் - பட்டுள்ளவாறான, வாராந்திர, மாதாந்திர , அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற தங்கும் இடங்கள் தங்கும் விடுதிகள் , சத்திரம் , மளிகை , விருந்தினர் இல்லம் , மற்றும் சமையல் செய்யும் வசதியுடன் கூடிய தங்கும் விடுதி (Service Apartments)

(3).திருமண மண்டபங்கள் , விருந்து மண்டபங்கள் அல்லது பொதுக்கூடங்கள் அல்லது விழாக்களை கொண்டாடுவதற்கான அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுத்தப்படும் அத்தகைய மற்ற பொது கூட்டங்களாக பயன்படுத்தப்படுகிற அனைத்து பொதுக் கூட்டங்களுக்கும் பொருந்தும்.

**2. உரிமக்கட்டணம் ( ஒரு வருடத்திற்கான கட்டணம்) :-**

(i). தெளிவாக வரையறுக்கப்பட்ட சமையலறை மற்றும் இருக்கை கூடங்களுடன் கூடிய உணவுக் கூடங்கள் சிற்றுண்டி சாலை அல்லது உணவகங்கள் விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிம கட்டணம் குறைந்தபட்சம் ரூ .1000/- அதிகபட்ச கட்டணம் ரூ.15000/-

**(ஒரு வருடத்திற்கான கட்டணம்):**

| **தொழில் விபரம்** | **200 சதுர அடி வரை** | **1000 சதுர அடி** | **1000 சதுர அடிக்கு மேல்** |
|---|---|---|---|
| (i)தெளிவாக வரையறுக்கப்பட்ட சமையலறை மற்றும் இருக்கை கூடங்களுடன் கூடிய உணவுக் கூடங்கள் சிற்றுண்டி சாலை அல்லது உணவகங்கள் விதிகளில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தொழில் உரிம கட்டணம் | 1000/- | 3000/- | 5000/- |
| ii) 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மகளிர் மற்றும் சிறுவர்களுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் முறைப்படுத்துதல் சட்டத்தின் கீழ் உரிமம் வழங்கப்பட்டவை தவிர உள்ள விடுதிகள் - | **2000 சதுர அடிகள் வரை** | **2001 முதல் 3000 சதுர அடிகள் வரை** | **3001 சதுர அடிக்கு மேல்** |
| | 1500/- | 2000/- | 3500/- |
| iii) 1939- ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதார சட்டத்தில் வரையறுக்கப்பட்ட வாரான வாராந்திர மாதாந்திர அல்லது வருடாந்திர அடிப்படையில் தங்குகிற தங்கும் இடங்கள் , சத்திரம், மளிகை விருந்தினர் , இல்லம் சேவை | **3000 சதுர அடிகள் வரை** | **3001 முதல் 5000 சதுர அடிகள் வரை** | **5001 சதுர அடிக்கு மேல்** |

| | | | |
|---|---|---|---|
| அடுக்குமாடி குடியிருப்புகள், | 3000/– | 5000/– | 10000/– |
| (iv) திருமண மண்டபங்கள், விருந்து மண்டபங்கள் அல்லது பொதுக் கூட்டங்கள் அல்லது விழாக்களைகொண்டாடுவதற்காக அல்லது விருந்து வைப்பதற்காக சாதாரணமாக பயன்படுத்தப்படும் அத்தகைய மற்ற பிற பொதுக் கட்டடங்கள் | **2000 சதுர அடிகள் வரை** | **2001 முதல் 5000 சதுர அடிகள் வரை** | **5000 சதுர அடிக்கு மேல்** |
| | 3000/– | 5000/– | 10000/– |

<u>அட்டவணை–IV</u>

<u>[விதிகள் 282 (11) மற்றும் 286 (2) பார்க்கவும்]</u>

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 2000/– | 30000/– |

| **தொழில் விபரம்** | **2000 சதுர அடிகள் வரை** | **2001 முதல் 5000 சதுர அடிகள் வரை** | **5001 முதல் 10000 சதுர அடிகள் வரை** | **10001 சதுர அடிக்கு மேல்** |
|---|---|---|---|---|
| தனியார் பார்க்கிங் ஸ்டாண்ட் மற்றும் தங்குமிடம் (ஆண்டுக்கு விகிதம்)= | 2000/– | 10000/– | 20000/– | 30000/– |

| நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் | குறைந்த பட்ச கட்டணம் (ரூ) | அதிக பட்ச கட்டணம் (ரூ) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| நகராட்சி மன்றம் | 2000/– | 20000/– |

| **தொழில் விபரம்** | **2000 சதுர அடிகள் வரை** | **2001 முதல் 5000 சதுர அடிகள் வரை** | **5001 முதல் 10000 சதுர அடிகள் வரை** | **10001 சதுர அடிக்கு மேல்** |
|---|---|---|---|---|
| தனியார் ஸ்லாட்டர் ஹவுஸ் (ஆண்டுக்கு விகிதம்) | 2000/– | 4000/– | 10000/– | 15000/– |

**<u>அலுவலக்குறிப்பு–</u>**

தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் அமைப்பு விதிகள் 2023–ன் படி தொழில் உரிமம் (Trade License fees) கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை மன்றம் பதிவு செய்யலாம்

**<u>ந.க.எண்: 0215 /2024/எச்1</u>**

**நகர்மன்ற தீர்மான எண் : 791 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் : 17

விருதுநகர் நகராட்சியில் 2024-2025 ஆம் ஆண்டிற்கு நகராட்சி மூலம் புதிதாக வீட்டுக்குழாய் இணைப்புகள் வழங்கிட அரசாணை எண்.97/12.07.2007-ன் படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.748/08 குடிநீர் வழங்கல் துறை நாள் 21.09.2009-ன் படியும் ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட மதீப்பீட்டுக் கட்டணத்திலிருந்து ஒவ்வொரு ஆண்டும் 5 சதவீதம் உயர்வு செய்து வசூல் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி நடப்பாண்டான 2024-2025க்கு ஏப்ரல் 2024 முதல் புதிதாக பெறப்படும் குடிநீர் குழாய் இணைப்பு விண்ணப்பங்களுக்கு கீழ்காணும் விபரப்படி கட்டணம் நிர்ணயம் செய்து வசூல் செய்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பதிவு கட்டணம் | ரூ.250/- | | |
| | வைப்புத் தொகை<br>அ)வீட்டு பயன்பாடு<br>ஆ)வீட்டு பயன்பாடல்லாதவை | <br>ரூ.4000/-<br>ரூ.15000/- | | |
| | **சாலை சீரமைப்பு கட்டணம்** | | | |
| 3 | நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் | கருங்கல் சல்லி சாலை ரூ. | தார் சாலை ரூ. | சிமெண்ட் சாலை ரூ. |
| | | கட்டணம் (5%) | கட்டணம் (5%) | கட்டணம் (5%) |
| | 0 - 30 மீட்டர் நீளத்திற்கு | ரூ.2200/- | ரூ.4695/- | ரூ.5430/- |
| | 30 - 90 மீட்டர் நீளத்திற்கு | ரூ.3647/- | ரூ.5945/- | ரூ.6685/- |
| | **மேற்பார்வைக்கட்டணம்** | | | |
| 4 | நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் | கருங்கல் சல்லி சாலை ரூ. | தார் சாலை ரூ. | சிமெண்ட் சாலை ரூ. |
| | | மேற்பார்வைக்கட்டணம் (20%) | மேற்பார்வைக்கட்டண ம் (20%) | மேற்பார்வைக்கட்டண ம் (20%) |
| | 0-30 மீட்டர் நீளத்திற்கு | ரூ.440/- | ரூ.939/- | ரூ.1086/- |
| | 30-90மீட்டர் நீளத்திற்கு | ரூ.730/- | ரூ.1189/- | ரூ.1337/- |
| | **ஆய்வுக் கட்டணம்** | | | |
| 5 | 0-30 மீட்டர் நீளத்திற்கு | ரூ.4000/- | ரூ.4000/- | ரூ.4000/- |
| | 30-90மீட்டர் நீளத்திற்கு | ரூ.6400/- | ரூ.6400/- | ரூ.6400/- |

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண் : 1755/2021/இ2

**நகர்மன்ற தீர்மான எண் : 792 தமிழ் நாடு குடிநீர் வாரியத்தின் மூலம் அனைத்து வார்டுகளிலும் குடிநீர் பகிர்மானக்குழாய் மற்றும் வீட்டு இணைப்பு வழங்கிய பின்பு பரிசீலனை செய்யலாம்.**

**பொருள் : 18**

விருதுநகர் நகராட்சிக்குட்ப்பட்ட ஆணைக்குட்டம் தலைமை நீரேற்று நிலையம் 125KVA ஜெனரேட்டர் காலேஜ் ரோடு VNPR பார்க் வளாகத்தில் உள்ள தரைமட்டத் தொட்டியில் உள்ள 82.5KVA ஜெனரேட்டர் நகராட்சி அலுவலகத்தில் உளள் 63KVA ஜெனரேட்டர் மற்றும் மதுரை சாலையில்உள்ள தரைமட்டத் தொட்டிக்கு உரிய 45KVA ஜெனரேட்டர்களுக்கு உரிய ஆண்டு பராமரிப்பு 03/2024ல் முடிவடைந்து உள்ளது. எனவே அதனை சீர் செய்ய 2024-2025 ஆண்டிற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள ரூ.2.00 இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்புஎண்:1977/இ2/2024.

**நகர்மன்ற தீர்மான எண் : 793 மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் : 19**

விருதுநகர் நகராட்சிக்கு உட்பட்ட 1 முதல் 36 வார்டுகளுக்கு 2024-2025 க்கான சொத்துவரி மற்றும் காலியிடவரிகளுகான கேட்பு அறிவிப்புகள் வரிவிதிப்புதாரர்களுக்கு அச்சிட்டு வழங்குவதற்க்கு ஆகும் செலவினம் ரூ 1,50,000/- (ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மேற் காண் பணியினை பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்:002581/2024/அ2

**நகர்மன்ற தீர்மான எண் : 794 மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் : 20**

விருதுநகர் நகராட்சி வார்டு எண் 29 ல் அமைந்துள்ள விலங்குகள் கருத்தடை மையம் சேதமடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் இருப்பதால் இந்நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 31 மாத்தநாயக்கன்பட்டியில் புதிதாக விலங்குகள் கருத்தடை மையம் அமைக்க ரூ20.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியை ஒப்பந்தப்புள்ளிகோரி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண் : இ2/ 3431/2024

**நகர்மன்ற தீர்மான எண் : 795 மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் : 21**

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 02 ல் லட்சுமி காலனி பகுதியில் 15 வது மத்திய நிதிக்குழு மான்யம் (united Grant) 2022-2023 ன் கீழ் 28.00 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை சீா்அமைக்கும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பணிகள் தற்போது முடிக்கப்பட்டுள்ளது பணிகள் தாமதமாக மேற்கொள்ளப்பட்டதால் (கூட்டுக்குடிநீர்திட்டம் மற்றும் பாதாள சாக்கடை குழாய்கள் பதிக்கும் பணிகள் முடிக்கப்பட்டு) தற்போது 15 வது மத்திய நிதிக்குழு மான்யம் (united Grant) 2022-2023 நிதி வழங்க இயலவில்லை தற்போது 15 வது மத்திய நிதிக்குழு மான்யம் united Grant) 2023-2024 ன் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான நிதி விடுவிக்கப்பட்டதில் கூடுதலாக விடுவிக்கப்பட்ட நிதி 20.68 இலட்சத்தினை மேற்காணும் இலட்சுமி காலனி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சாலை சீரமைப்புபணிக்கு வழங்க அனுமதி கேட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பட்டுள்ளது. இப்பணிக்கு

வழங்கப்பட வேண்டிய மீதமுள்ள தொகை ரூ7.32 இலட்சத்தினை நகராட்சியின் பொது (வருவாய்நிதி) நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண் : இ2/0712/2024

**நகர்மன்ற தீர்மான எண் : 796 மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 22

விருதுநகர் நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களின் ஈப்பு வாகனம் வாகன எண் TN67BP1542 க்கு பழுதினை(Repairs in clutch plates cover assembly ,clutch pit clutch oil and all services) சீர்செய்ய ஆகும் செலவினம் தொகை ரூ.22,357/- க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண் : இ2/1002-1/ 2024

**நகர்மன்ற தீர்மான எண் : 797 மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 23

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளில் தண்ணீர் விநியோகம் செய்ய (Delivery of 6000 Litre capacity Water Tanker Lorry BSVI ) வாகனம் கொள்முதல் செய்யும் பணிக்கு எம்/எஸ் லட்சுமி இண்டஸ்டிரிஸ், மேட்டுர் நிறுவனத்திற்கு 4.3.2024 ல் பணிஉத்தரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணிக்கு வாகனத்தின் chassis வாங்குவதற்கு உண்டான தொகை ரூ 18,49,965/ ஐ LRN MOTORS (P) LTD, SELAM வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண் : இ1/0712/2023

**நகர்மன்ற தீர்மான எண் : 798 மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 24

விருதுநகர் நகராட்சியின் 36 வார்டுகளுக்குள்ளான சாலை விவரப் பதிவேடுகளில் விடுபட்ட சாலை விபரங்களை பதிவேற்றம் செய்ய அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண் : இ1/3297/2024

**நகர்மன்ற தீர்மான எண் : 799 மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 25

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட வார்டு- 9 வீரபத்ரன் தெரு, சங்கரன் கிணற்று தெரு மற்றும் பிச்சை தெரு ஆகிய பகுதிகளில் வடிகால் மற்றும் சிறுபாலம் சேதமடைந்து பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படுத்தும் நிலையில் இருப்பதால் அதனை சீரமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.4.30/-இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
கோப்பு எண் : இ1/ /2024

**நகர்மன்ற தீர்மான எண் : 800 மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் : 26**

விருதுநகர் நகராட்சிக்கான கனரக வாகன நிறுத்துமிடம் சுற்றுச் சுவர் மற்றும் இதர வசதிகளுடன் கனரக வாகன காப்பகம் அமைக்கும் பணிக்கு ரூ.700.00 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை திட்ட ஆலோசகர் மூலமாக தயார் செய்யும் பணிக்கு பொது நிதி 2023-2024 ஆம் ஆண்டின் கீழ் மேற்கொள்வதற்கு இந்நகர் மன்றத் தீர்மான எண்.624 நாள்.31.01.2024-ன் படி அனுமதி அளித்துள்ளது. அதன் பேரில் மேற்காணும் பணிகள் மேற்கொள்ள 10.06.2024-இல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டன. 11.06.2024 அன்று மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்ததாரர் விலைப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | GRANDYART Constructions Tiruchengode. | ரூ.5,60,000/- |
| 2. | KK Construction Tiruppur. | ரூ.6,10,000/- |
| 3. | SMART Builders Dharmapuri. | ரூ.5,00,000/- |

மேற்காண் பணிக்கு வரப்பெற்ற மூன்று ஒப்பந்ததாரர் விலைப்புள்ளிகளில் குறைவாக அளித்துள்ள **SMART Builders Dharmapuri.** அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
இ1/10796/2022

**நகர்மன்ற தீர்மான எண் : 801 மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் : 27**

## நகர்மன்ற தலைவரால் கொண்டு வரப்படும் தீர்மானம்

இராவ் பகதூர் உயர்நிலைப்பள்ளி முன்புறம் உள்ள RO Water Plant சிவந்திபுரம் வாட்டர் டேங்க் முன் புறம் உள்ள RO Water Plant மற்றும் பழைய பஸ் நிலையம் உள்ள RO water Plant 4 மாதகாலமாக செயல்பட வில்லை அதனை பராமரிப்பு செய்து வந்த நிறுவனம் Misty pure technology Pvt ltd. பல முறை தொலைபேசியில் அழைத்தும் கடிதம் அனுப்பியும், செயல் படுத்த எந்த வித நடவடிக்கையும் எடுக்க வில்லை. எனவே RO Water plant நகராட்சி நிர்வாகம் ஏற்று கொண்டு Company உரிமைகளை ரத்து செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**நகர்மன்ற தீர்மான எண் : 802 மன்றம் அனுமதிக்கப்பட்டது**

நகர்மன்றத் தலைவர்
விருதுநகர் நகராட்சி

## விருதுநகர் நகராட்சி

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2048 ம் சோபகிருது வருடம் ஆனி 32 ம் நாள் 2024 ம் ஆண்டு ஜூலை மாதம் 16.07.2024 ம் தேதி செவ்வாய் கிழமை மாலை 4.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் இராஜா மாளிகை பெருந்தலைவர் காமராஜர் கூடத்தில் நடைபெறும் அவசர கூட்ட நடவடிக்கைகள்.

**பொருள் : 1**

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளில் குடிநீர் பகிர்மானக் குழாய்களில் அவ்வப்போது உடைப்புகள் ஏற்பட்டு தண்ணீர் கசிவாகி வருகிறது. மேற்படி பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்ய தேவையான pvc pipe மற்றும் special வாங்குவதற்கு ரூ.3.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியின் அவசியம் கருதி ஒப்பந்தபுள்ளிகோரி பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண் : இ2/3816-1/2024

**நகர்மன்ற தீர்மான எண் : 803 மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் : 2**

விருதுநகர் நகராட்சிப்பகுதிக்கு நகராட்சியின் தனிதிட்டமான ஆணைக்குட்டம் மற்றும் ஒண்டிப்பபுலி நீர்த்தேக்கம் ஆகியவற்றிலிருந்து குடிநீர் பம்பிங் செய்யப்பட்டு நகரில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. மேற்படி திட்டங்களிலிருந்து பம்பிங் செய்யப்படும் குழாயில் (10”AC) அடிக்கடி உடைப்பு ஏற்பட்டு குடிநீர் வீணாகி வருகிறது. pumping main ல் ஏற்படும் உடைப்புகளை உடனுக்குடன் சரிசெய்ய 12 ” கிளாம்ப் செட் (துத்தநாகதகடு) தேவைப்படுகின்றது. இப்பணிக்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.1.00 இலட்சம் ஆகும். இப்பணியின் அவசியம் கருதி பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண் : இ2/3816/2024

**நகர்மன்ற தீர்மான எண் : 804 மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் : 3**

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 36 ல் அமைந்துள்ள ஆணையாளர் குடியிருப்பு மற்றும் அலுவலகத்தில் உள்ள ஆணையாளர் அறையில் மராமத்து பணிகள் மேற்கொள்ள ரூ.1.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது இப்பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண் : இ1/3281/2024

**நகர்மன்ற தீர்மான எண் : 805 மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் : 4**

இந்நகர்மன்ற தீர்மான எண் 426 நாள் 28-04-2023 ன் படி விருதுநகர் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இந்நகராட்சி பகுதியில் சேகரம் ஆகும் குப்பைகளை M/s.ExserNet. Madurai என்கிற தனியார் நிறுவனம் மூலம் ( Private Service Provider ) அப்புறப்படுத்தும் பணிகளை 01-06-2023 முதல் 31-05-2024 வரை ஒரு வருட காலத்திற்கு பணி மேற்கொள்ளுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் செய்யப்பட்டு வரும் நிலையில் இப்பணியானது 31-05-2024 தேதியுடன் பணிக்காலம் நிறைவடைகிறது.

தற்போது பாராளுமன்ற தேர்தல் அறிவிப்பு வெளியிட இருப்பதாலும், நன்னடத்தை விதிகள் அமுலில் வர உள்ளதாலும், பொதுசுகாதார பணிகள் அவசர அவசியம் கருதியும் 01-06-2024 முதல் 31-08-2024 வரை மூன்று மாதங்கள் மேற்கண்ட பணிகளை M/s.ExserNet. Madurai என்ற நிறுவனத்திற்கு இந்நிறுவன ஒப்புதலின் பேரில் பணி நீட்டிப்பு செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.132 இலட்சம் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** : தற்போது பாராளுமன்ற தேர்தல் அறிவிப்பு வெளியிட இருப்பதாலும், நன்னடத்தை விதிகள் அமுலில் வர உள்ளதாலும், பொதுசுகாதார பணிகள் அவசர அவசியம் கருதியும் எதிர் வரும் மன்ற கூட்டத்தில் ஒப்புதல் பெறுவதை எதிர்நோக்கியும், நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளபட்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்

**ந.க.எண்.427/எச்1/2023**

**நகர்மன்ற தீர்மான எண் : 806 மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் : 5**

நகராட்சி நிர்வாக ஆணையர் ந.க.எண்.3250/2016/ஜெ2 நாள்.26-10-2017ன் படி விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளை பராமரிப்பு மற்றும் வளாக துப்புரவு பணிகள் விருதுநகர் நகராட்சியில் உள்ள 11 நகராட்சி மற்றும் 1 அரசு பள்ளிகளில் 01-09-2021 முதல் Evergreen Environment Service ராமநாதபுரம் என்ற நிறுவனம் மூலம் 15 துப்புரவு பணியாளர்களை கொண்டு இவ்வலுவலக உத்தரவு எச்1/1129/2021 நாள்.28-04-2023ன் படி 01-09-2021 முதல் பணி நீடிப்பு அடிப்படையில் 30-06-2024ல் முடிய காலநீட்டிப்பு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்காலம் முடிவடைய உள்ளதாலும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் மறு உத்தரவு வரும் வரை, மேற்கூறிய நிறுவனம் மூலம் தற்போது நடைமுறையில் உள்ள பணியாளர்கள் கொண்டு 01-07-2024 முதல் தற்போது பணி மேற்கொள்ள பள்ளிகளில் தூய்மை பணி நீட்டிப்பு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.4097/2024/எச்1

**நகர்மன்ற தீர்மான எண் : 807 மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 6

இந்நகராட்சியில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு காவற் பொறுப்பாளர் பணியிடம் (Care Taker) அரசு ஆணையின் படியும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்:10988/22/ச1 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் 27968/2022/ நாள்:05.11.2023 வழி காட்டுதலின் படியும் ஒப்பந்த அடிப்படையில் (Out Sourcing) மாதம் ரூ.20,000/- வீதம் ஓர் ஆண்டிற்கான தொகை 20*12=2,40,000/- (ரூபாய் இரண்டு லட்சத்தி நாற்பதாயிரம்) உடன் இதர கூடுதல் செலவான PF,ESI Service charges &.4,450*12=53,400/- ஆக மொத்தம் 2,40,000+53,400=2,93,400/- (ரூபாய் இரண்டு லட்சத்தி தொன்னுற்றி மூன்று ஆயிரத்தி நானூறு மட்டும்) நகராட்சியின் நூலக வரியில் இருந்து செலவு செய்யவும் எற்கனவே அவசர அவசியம் கருதி 2024 ஜனவரி மாதம் (10.01.2024 முதல் 31.01.2024) இருபத்தி ஓர் நாட்களுக்கு ஊதியம் வழங்கிய தொகை ரூ.17,352/-(ரூபாய் பதினேழாயிரத்து முன்னுற்றி ஐம்பத்தி இரண்டு மட்டும்) மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்:348/2024/எம்1

**நகர்மன்ற தீர்மான எண் : 808 மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 7

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10ல் உள்ள சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் சேதமடைந்து பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படுத்தும் நிலையில் இருப்பதனால் அதனை சீரமைக்கும் பணிக்கு 2024 - 2025 ஆம் ஆண்டு வருவாய் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள அதற்கான செலவினம் ரூ.4.50/- இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் பார்வையிட்டு பதிவுசெய்யலாம்.

கோப்பு எண் : இ1/3259-1/2024

**நகர்மன்ற தீர்மான எண் : 809 மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 8

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், ஆய்வுக் கூட்டங்கள் நேரடி மற்றும் நகராட்சி அறிவிப்புகள் ஆகியவற்றை **சமூக ஊடகங்களான Twitter, Facebook, whatsapp, Instagram மற்றும் சமூக வலைதளங்களில்** பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். மேலும் பொதுமக்களிடம் ஊடகம் மற்றும் வலை தளங்கள் மூலம் வரப்பெறும் குறைகளை கண்காணித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். பணிகளை தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி பராமரிக்கவும் மாதம் ஒன்றிற்கு ரூ.8000/- ம் வீதம் ஒரு ஆண்டிற்கு ரூ.96,000/- மட்டும் மதிப்பீட்டில் சமூக ஊடக பராமரிப்பு பணிகள் 2024 - 2025 ஆம் ஆண்டு வருவாய் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண் : இ1/0135-1/2024

**நகர்மன்ற தீர்மான எண் : 810 மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 9

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 ல் உள்ள நீர்மாலை ஓடைத்தெருவில் இடிந்துள்ள சுகாதார வளாகத்தினை முழுவதுமாக அகற்ற கூடுதலாக தொகை தேவைப்படுவதால் 2024 - 2025 ஆம் ஆண்டு வருவாய் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள அதற்கான செலவினம் ரூ.0.50/- இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மேற்படி பணிக்கு ந.ம.தீ.எண்.775 நாள்.14.03.2024 ன் படி ரூ.20,000/- மட்டும் மன்றம் அனுமதி பெறப்பட்டுள்ளதையும் மன்றம் பார்வையிட்டு பதிவுசெய்யலாம்.

கோப்பு எண் : இ2/0135/2023

**நகர்மன்ற தீர்மான எண் : 811 மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 10

விருதுநகர் நகராட்சிக்குட்பட்ட இரயில்வேபீடர் சாலையில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்தில் மாவு அரைக்கும் இயந்திரம் முழுவதுமாக பழுதடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ளதனால் புதிய மாவு அரைக்கும் இயந்திரம் கொள்முதல் செய்யும் பணிக்கு 2024 - 2025 ஆம் ஆண்டு வருவாய் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள அதற்கான செலவினம் ரூ.0.60/- இலட்சம் மட்டும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண் : இ1/3259/2024

**நகர்மன்ற தீர்மான எண் : 812 மன்றம் அனுமதிக்கப்பட்டது**

## பொருள் : 11

விருதுநகர் நகராட்சி பகுதியில் புதிய குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்கான குடிநீர் இணைப்பு முன்வைப்புதொகை மற்றும் மாதாந்திர குடிநீர் கட்டணம் 2015 ஆம் ஆண்டு மாற்றியமைக்கப்பட்டு தற்போதுவரை நடைமுறையில் இருந்து வருகிறது. நகரில் புதிய குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, துவங்கும் நிலையில் உள்ளது அரசுக்கு செலுத்த வேண்டிய கடனகள் அதிகம் உள்ளதாலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் 23.08.2022, 31.10.2023 மற்றும் 09.05.2024 ஆகிய கடிதங்களின் மூலமும் குடிநீர் விநியோக துணைச்சட்டங்களை திருத்தம் செய்ய அறிவுறித்தியுள்ளதாலும் புதிய குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்கான முன்வைப்புத்தொகை மற்றும் மாதாந்திர குடிநீர் கட்டணங்களை கீழ்கண்டவாறு மாற்றியமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **<u>தற்போது நடைமுறையில் உள்ள குடிநீர் வைப்புத்தொகை மற்றும் குடிநீர் கட்டண விவரம்</u>** | **<u>உயர்வுசெய்யவேண்டிய குடிநீர் வைப்புத்தொகை மற்றும் குடிநீர் கட்டண விவரம்</u>** |
|---|---|
| குடிநீர் இணைப்பு முன்வைப்பு தொகை<br>• வீட்டு உபயோகம் -ரூ.4000<br>• வணிக உபயோகம்-ரூ15000<br>• தொழிற்சாலை உபயோகம்--ரூ.30000 | குடிநீர் இணைப்பு முன்வைப்பு தொகை<br>• வீட்டு உபயோகம் -ரூ.7500<br>• வணிக உபயோகம்-ரூ20000<br>• தொழிற்சாலை உபயோகம்--ரூ.35000 |

| குடிநீர் இணைப்பு மாதந்திர கட்டண தொகை<br>• வீட்டு உபயோகம் -ரூ.110<br>• வணிக உபயோகம்-ரூ500<br>• தொழிற்சாலை உபயோகம்--ரூ.500 | குடிநீர் இணைப்பு மாதந்திர கட்டண தொகை<br>• வீட்டு உபயோகம் -ரூ.150<br>• வணிக உபயோகம்-ரூ750<br>• தொழிற்சாலை உபயோகம்-ரூ.1000 |
|---|---|

அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத்தலைவரின் குறிப்பு** : தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் மூலம் அனைத்து வார்டுகளிலும் குடிநீர் பகிர்மானக்குழாய் மற்றும் வீட்டு இணைப்பு வழங்கிய பின்பு பரிசீலனை செய்யலாம்.

கோப்பு எண் : இ2/9665/2024

**நகர்மன்ற தீர்மான எண் : 8 13 தமிழ் நாடு குடிநீர் வாரியத்தின் மூலம் அனைத்து வார்டுகளிலும் குடிநீர் பகிர்மானக்குழாய் மற்றும் வீட்டு இணைப்பு வழங்கிய பின்பு பரிசீலனை செய்யலாம்.**

நகர்மன்றத்தலைவர்
விருதுநகர் நகராட்சி